بسم الله الرحمن الرحيم

**Friday Sermon/ வெள்ளிக்கிழமை குத்து.ஃபா 07 April 2017**

**(09 Rajab 1438 Hijira)**

# "CONVERSE WITH GOD ALMIGHTY"

# "எல்லாம் வல்ல இறைவனிடம் உரையாடிடுங்கள்"



உலக மக்களுக்கு சலாம் தெரிவித்த பிறகு தஷஹ்ஹுதும் தஅவ்வுதும் சூரா.ஃ.அல் பாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் கீழ்வருமாறு தம் பேருரையை ஆரம்பித்தார்.

**"அவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கையிலும் மறுமையிலும் நன்மாராயமுண்டு அல்லாஹ்வின் வாக்குகளில் எவ்வித மாற்றமுமில்லை. அதுவே மகத்தான பெரும் வெற்றியாகும்" (10-65)**

ஒரு நபரின் மனதில் ஒரு கருத்து தோற்றிக் கொள்ளவும் அக்கருத்தைக் குறித்து அவர் மிக ஆழமாக சிந்தித்துக் கொள்ளவும் செய்கின்றார். உதாரணமாக, ஒரு கவிஞர் ஒரு வாக்கியத்தின் பகுதியை எழுதிக்கொண்டப்பிறகு அடுத்த பகுதிக்காக அவர் சிந்தித்துக் கொள்ளவும் செய்கின்றார். அதன் பலனாக அவரின் மனது அடுத்த பகுதிக்கான கருத்தை வழங்கிக் கொள்ளவும் செய்வதைப் போன்றல்ல, (இறை) வெளிப்பாடுகள் என்பதை உறுதியாக நீங்கள் உணர்ந்துக்கொள்ள வேண்டும். அது வெளிப்பாடுகளல்ல மாறாக, அவரின் சிந்தனையின் பிரதிபலித்தலாகும். ஒரு மனிதன் நல்லதோ கெட்டதோ ஆன ஒரு விஷயத்தைக் குறித்து சிந்திக்கும் பொழுது அதற்கு உகுந்த ஒரு கருத்து அவரின் மனதில் உதித்துக்

கொள்கின்றது. எடுத்துக்காட்டாக கூறினால் **ஒரு நற்குணமுடையவரை பொறுத்தவரையில், அவரின் மனதில் குடிகொள்ளும் அந்த நற்எண்ணங்களுக்கு ஏற்றவகையிலான நற்கருத்துகள் முளைத்துக் கொள்கின்றது. அதைப் போன்றே ஒரு தீயகுணமுடையவரின் மனதில் அத்தீய எண்ணங்களுக்கு உகுந்த வகையிலான தீய கருத்துகள் முளைத்துக் கொள்கின்றது. அதை அவர் நற்குணமுடையவருக்கு எதிராக பயன்படுத்துகின்றார்.**

இதன் அடிப்படையில் பார்த்தால், ஒருவரின் மனதில் முளைத்துக் கொள்ளும் கருத்துகளை வெளிப்பாடுகள் என எண்ணயியலாது. அவ்வாறே நாம் எண்ணிக்கொண்டால், ஒரு மோசமான கவிஞர், அதாவது உண்மைக்கும் உண்மையாளருக்கும் எதிராக செயல்படும் ஒரு கவிஞர், உண்மைக்கு முரண்பாடான விஷயங்களை எழுதிக்கொண்டால் அப்பொய் வேடனாகிய அவரும் இறைவெளிப்பாடுகளைப் பெற்றுக் கொள்பவர் என கூறிக் கொள்ள வேண்டும். ஏராளமான புதினங்கள்(Noval) மிக நல்ல முறையில் எழுதப்பட்டிருக்கின்றது. ஆனால் அவை முழுமையாகவும் பொய் பிரச்சாரங்களை கொண்டவையாகவும் மட்டுமின்றி தொடராக மிக நல்ல முறையில் அமைத்திருக்கும் கட்டுக்கதைகளாகவும் இருக்கும். இவ்வகை கதைகளை இறைவெளிப்பாடுகள் என நமக்கு கூறிக்கொள்ள முடியுமா?

வெளிப்பாடுகள் என்பது ஒருவரின் மனதில் உருவம் கொள்ளுகின்ற கருத்துகள் மட்டுமாகயிருந்தால் ஒரு கள்வனுக்கு கூட வெளிப்பாடுகள் கிடைக்கின்றது என்று கூறிக்கொள்ள வேண்டும். ஏனெனில் மிக வல்லோனாகிய ஒரு திருடன், திருடிக் கொள்வது முற்றிலும் அற்புதமான நிலையிலாகயிருக்கும். திருடிக் கொள்வதற்கும், கொலை செய்வதற்குமாக புத்திவாய்ந்த பல்வேறு திட்டங்களும் அவரின் மனதில் தோன்றியிருக்கும். இந்த நெறிகேடான திட்டங்களையாவும் வெளிப்பாடுகள் என நமக்கு கூறிக்கொள்ள இயலுமா? நிச்சயமாகவும் இல்லை. இது, உண்மையான இறைவனைப்பற்றி உணர்ந்துக் கொள்ளாதவர்களின் சிந்தனைகள் மட்டுமாகும். உண்மையான இறைவன் தன் அடியார்களின் இதயத்திற்கு ஆறுதலை அளித்துக் கொள்ளவும் அவனது வார்த்தைகளைக் கொண்டு ஆன்மீக அறிவுகளை வழங்கிக் கொள்ளவும் செய்கின்றான். அவ்வகை ஞானங்கள் அவர்களின் அறிவில் உட்பட்ட விஷயங்களாகயிருக்காது. மாறாக அதற்கு அப்பாற்பட்டதாக இருக்கும்.

## What then is revelation?

### அப்போது வெளிப்பாடுகள் என்றால் என்ன?

**அது, பரிசுத்தனும் வல்லமையுடையவனுமாகிய இறைவனின் ஆற்றல்மிக்கதும் உயிர்வாய்ந்ததுமான உரையாடலாகும். அவன் தேர்ந்தெடுத்த அவனது அடியாரிடம் அவன் உரையாடுகின்றான். அதாவது ஒருவரை தேர்ந்தெடுத்துக் கொள்ள அவன் நாடும்பொழுது அவருடன் நடத்திக் கொள்ளும்**

**பேச்சு வார்த்தைகளாகுமது. இந்த உரையாடல்கள் தொடர்ச்சியாகவும் திருப்தி வாய்ந்ததாகவும் ஆரம்பித்துக் கொள்ளும் பொழுது, அவ்வெளிப்பாடுகள்யாவும் முழுமையடையாததும் அர்த்தமற்றதுமான சற்று வார்த்தைகளின் கூட்டம் மட்டுமாகாமல் இருக்கவும் மேலும் அவ்வெளிப்பாடுகள் பிரகாசத்தை கொண்டும் ஞானத்தைக் கொண்டும் மகத்துவத்தைக் கொண்டும் முழுமை பெற்றுவிட்டால், நிச்சயமாகவும் அது இறைவனின் வார்த்தைகளாகவேயிருக்கும். அது வாயிலாக இறைவன் அவனது அடியானை இன்பத்தின் குளிர்ச்சியின்பால் எட்டவைப்பதற்கான திட்டங்களை ஆரம்பிக்கின்றான். மேலும் அவர் மூலமாக அவன் சுயம் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவும் செய்கின்றான்.**

சில சூழ்நிலைகளில், வெளிப்பாடுகள் பெற்ற ஒருவர் அவ்வெளிப்பாடுகள் உண்மையானது என உறுதிபடுத்திக் கொள்வது சில சோதனைகள் வாயிலாகவேயாகும். இவ்வகையான கட்டத்தில் வெளிப்பாடு பெற்றுக் கொள்பவரை சோதனைகளுக்கு ஆளாக்கி கொள்வது, அவர் மீது முழுமையாக அருள்களை பொழிந்துக் கொண்டல்ல. அதாவது அக்கட்டத்தில் உண்மையான வெளிப்பாடுகளை வழங்கிக் கொள்வதற்கு முன்னதாகவே வெளிப்பாட்டின் சுவையை மட்டும் அளித்துக் கொள்கின்றான். தொடர்ந்து இவ்வகையிலான(இறை) வெளிப்பாடுகளை பெற்ற நல்லடியாராகிய ஆள்களின் பாதைகளை பின் தொடர்ந்து பயணம் மேற்க் கொள்வதற்கும் முன்னேற்றமடைவதற்கும் அவன் அவர்களை தெரிவிக்கின்றான். அதில் குறைவேதேனும் நிகழ்ந்தால் அதாவது உண்மையான நல்லடியார்களின் பாதையினை பின்தொடர்ந்து பயணம் புரிய ஆயத்தமாகாமலிருந்தால், இந்த அருள்களிலிருந்து(இறைவெளிப்பாடுகளிலிருந்து) அவரை அவன் வெளியேற்றிக் கொள்கின்றான். பின்னர் ஏஞ்சுவது அடிப்படையற்ற அன்னாரின் தற்பெருமை(எனக்கு வெளிப்பாடுகள் கிடைக்கின்றது என்று தற்பெருமை) மட்டுமாகும்.

நல்லடியார்களாகிய இலட்சகணக்கான மக்களுக்கு வெளிப்பாடுகள் கிடைத்ததுண்டு. ஆனால் அவர்கள் யாவரும் இறைவனின் பார்வையில் துல்லியமானவர்களல்ல. நிச்சயமாகவும் இறைத்தூதர்கள் கூட பதவியில் சமமானவர்களல்ல. எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகின்றான்.

**"அத்தூதர்கள்-அவர்களில் சிலரைச் சிலரைவிட நாம் மேன்மையாக்கி இருக்கின்றோம்" (2:254)**

இது நம்மை கற்பிப்பது, வெளிப்பாடு அது முற்றிலும் இறையருள் என்றாகும். அது உன்னதமான பதவிக்கான சான்றல்ல. உன்னதமான பதவி என்பது உண்மையுடையவும் உள்ளபூர்வமான செயல்களுடையவும் வெளிப்பாடுகளைப் பெற்றுக் கொள்பவரின் நம்பிக்கையுடையவும் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. அதாவது, அதன் அளவிற்கு ஏற்றவாறு நிர்ணயிக்கப்படுகின்றது. அது நன்கறிபவன் அல்லாஹ் மட்டுமாவான்.

வெளிப்பாடுகளுக்கு இத்தகை அருள் நிறைந்த விதிமுறைகள் இருந்தால் கூட இது இத்தகை ஒழுக்கத் தன்மைக்கு கிடைக்கும் பலனாகவேயிருக்கின்றது. வெளிப்பாடுகள் கிடைக்கும் பொழுது அதைப் பெற்றுக் கொள்பவர் இறைவனிடத்தில் ஒரு கேள்வியை சமர்பித்துக் கொள்கின்றார். அதற்கு இறைவன் பதிலளிக்கின்றான். அவ்வகையான கேள்வி-பதில்களின் ஒரு தொடரே நிகழ்கின்றது. வெளிப்பாடுகளுக்கு மிக சிறப்பான இறைவல்லமையும் ஒளியும் இருக்கின்றது. மட்டுமின்றி மறைவானவனிடமிருந்துள்ள ஞானமும், அந்த ஞானத்திற்கு விளக்கமும் கிடைக்கின்றது. ஒரு உண்மையான ஞானபயிலுதல் நிகழ்கின்றது. நிச்சயமாகவும் அது இறைவசனமாகவேயிருக்கும்.

**இறைவெளிப்பாடு என்பது இரண்டு நண்பர்கள் ஒன்றுக் கொன்றான உரையாடலைப் போன்று இருக்க வேண்டும். அது கட்டாயமாகும். இறையடியார் ஒரு கேள்வி சமர்பித்துக் கொள்ளும் பொழுது, எல்லாம் வல்ல இறைவனிடமிருந்து இனிமையானதும் தெளிவானதுமான ஒரு பதில் அவருக்கு கிடைத்திட வேண்டும். இவ்விஷயத்தில் அந்த நபருக்கும் அவரின் சிந்தனைக்கும் அதில் எந்த பங்குமிருக்காது. இத்தகையான ஒரு வெளிப்பாடு இறைவனின் கருணையின் வாயிலாக ஒருவருக்கு கிடைத்தால் அது நிச்சயமாகவும் இறைவனிடமிருந்துள்ள வெளிப்பாடுகளாகவேயிருக்கும். அத்தகை (இறை) வார்த்தைகளை பெற்றுக் கொள்பவர் இறைவனுக்கு பிரியமானவராகவே இருப்பார்.**

தெளிவானதும் தூய்மையானதுமான நிலையில், உயிருள்ளதும் பரிசுத்தவுமான அத்தகை வெளிப்பாடுகளின் ஒரு நிரைதான் தம் அடியானுக்கு இறைவன் வழங்கிக் கொள்கின்றான். அத்தகை வெளிப்பாடுகளை அவன் பேருதவி வாயிலாகவே பொழிந்துக் கொள்கின்றான். அத்தகை தூதுச் செய்திகளில்(இறை வெளிப்பாடுகளில்) நற்செயல்கள் கொண்டும் உள்ள பூர்வமான நோக்கங்கள் கொண்டும் நம்பிக்கை கொண்டும் உன்னதமான நிலையையடையாதவர்களின் வார்த்தைகளிலிருந்துள்ள எதுவும் அதில் இருப்பதில்லை. அதைக்குறித்து தற்பொழுது இங்கு கூறிக்கொள்ள விரும்பவில்லை. உண்மையானதும் தூய்மையானதுமான வெளிப்பாடுகள் என்பது இறை உண்மையினை நிரூபிக்குமளவிற்கு ஏராளமான அற்புதங்களை கொண்டவையாக இருக்கும். வல்லமையுடைய ஒரு ஒளி தென்பட்டுக் கொள்ளவும் அதோடு அற்புதம் வாய்ந்ததும் பிரகாசம் நிறைந்ததுமான வெளிப்பாடுகள் இறங்கிக் கொள்கின்றது. பல வேளைகளிலும் இவ்வாறே அவன் வெளிப்பாடுகளை பொழிந்து கொள்கின்றான்.

**ஆகாய-பூமிகளை படைத்த இறைவனிடமிருந்து கிடைக்கும் வெளிப்பாடுகளை விட- அதாவது அந்த வெளிப்பாடுகளை பெற்றுக் கொள்பவருக்கு அதைவிட மேலான வேறெந்த அருள்கள் உள்ளன? இவ்வுலகின் வைத்து இறைவனை கண்டுக் கொள்ள முடிந்துவிடுவது, அவன் உரையாடல்கள் வாயிலாகவே ஆகும்.**

அல்லாஹ்விடம், தீவிரமான இந்த பிரார்த்தனையோடு நான் இந்த பேருரையை நிறைவுபடுத்துகின்றேன். ஜமா அத்துசஹீஹில் இஸ்லாமை சார்ந்த ஒவ்வொரு உறுப்பினருக்கும், எனது எல்லா தோழர்களுக்கும், நண்பர்களுக்கும், அனைத்து முஸ்லீம்களுக்கும், மானிடகுலத்திற்குயாவும் வெளிப்பாடின் உண்மையினை உணர்ந்துக் கொள்வதற்கான ஆற்றல் வழங்குவாயாக!

வெளிப்பாடின் உண்மையும் அதன் முக்கியத்துவம் நம் வாழ்கையில், குறிப்பாக ஒரு இறைத்தூதரின் காலகட்டத்தில் வாழ்ந்திருக்கும் உங்களுக்கு உணர்ந்துக் கொள்ள முடியட்டும். **இந்த தூதரை தோற்றுவித்திருப்பதன் நோக்கம், மானிட குலத்தையாவும் எல்லாம் வல்ல இறைவனின்பால் வழிகாட்டிக் கொள்வதற்கே ஆகும்.** இன்ஷா அல்லாஹ். ஆமீன்.


**Issued by:**
Jamaat Ul sahih Al Islam
Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al- islam.com

**Translated by:**
Azim Ahmad
**E-mail:** azimahmad070@gmail.com
Cell: 9789180817